35/-

உ.

ஸ்ரீ வல்லிபுரேசன் துணை



ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய

# வரலாற்றுச் சிறப்பு

உ

ஸ்ரீ வல்லிபுரேசன் துணை

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய

# வரலாற்றுச் சிறப்பு

நீராய் நிலனாய் தீயாய் காலாய் நெடுவானாய்
சீரார் சுடர்கள் இரண்டுமாய் சிவனாய் அயனானாய்
கூர்ஆர் ஆழிவெண் சங்கேந்தி கொடியோன் பால்
வாராய் ஒருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே

வரலாற்று ஆதாரம்:- "தக்ஷிண கைலாய மான்மியம்"

வெளியீடு:- ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் பரிபாலன சபை.

வெளியீட்டு உரிமை:- ஷெ கோயில் பரிபாலன சபையினர்க்கே உரியது,

உ

ஸ்ரீ வல்லிபுரேசன் துணை

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய

# வரலாற்றுச் சிறப்பு

சோலரூபா மயிலையுருக் 'கொண்டநாதர்' கொடுங்கொலைக்குக்
காலரூபா நீகர் நாரகண்டரவ கச்சரூபா
வாலரூபா கவினறருவசமன வாண் மழுக்கொள் வரராமா
நீலரூபந்தரு ராமா நிலவு வெள்ளைநிற ராமா.

விராட் புருடனது சரீரமாகிய பிரமாண்டத்தின் இடை நாடி ஸ்தானம் எனப் பெற்றதும், பெருமை பொருந்திய மகாமேரு மலையின் கொடுமுடியாக விளங்கப் பட்டதும் வாயுதேவனுற் சமுத்திர மத்தியிலே ஸ்தாபிக்கப்பட்டதும் சுந்தரமூர்த்தி நாயனரும். திருநாவுக்கரசு நாயனரும் திருப்பதிகம் பாடிய சிவக்ஷேத்திரங்களையும தேவர், இருடிகள் முதலியோரால் ஸ்தாபித்த சிவக்ஷேத்திரங்களையும், கலியுகத்திலே கண்கண்ட பரம தெய்வம் எனப் பாருளோர் மெச்சுகின்ற கதிர்காமத்தையும், சிவனொளிபாதம் முதலிய எண்ணிறந்த திவ்ய ஸ்தலங்களையும், புண்ணிய நதிகளையும் தன் வயிறுடையதும் தமிழரசரால் நெடுங்காலம் செங்கோல் செலுத்தப் பட்டதும் மலைபடு, காடுபடு, கடல்படு திரவியங்கள். நீர்வளம், நிலவளம், மாணிக்கம் ஆகிய நிறைந்து பொலிவதால் அழகாபுரியின் சிறப்பை ஒக்குமியல்பையுடையதும் ஸ்ரீ ராமபிரானுடைய திருவடித் தாமரை தீண்டப்படுதலினுலும் பிறவற்றுனும் புண்ணிய பூமியாக விளங்குவதும் ஆகிய ஈழமண்டலமாம் இலங்கையின் வடக்கின் கணையுள்ள யாழ்ப்பாணத்தினது வடகீழ்ப்பகுதியாகிய வடமராட்சியின் சமுத்திர தீரத்துக் கணித்தாக ஆன்ம கோடிகளை இரட்சிக்கும பொருட்டு ஸ்ரீபூமி நாயகராகிய பகவான் மகா விஷ்ணுமூர்த்தியானவா மச்சாவதாரமாகிய திரு அவதாரத்தை எடுத்துக் காத்தற் கடவுளாய் "வல்லிபுரம்" எனும் திவ்ய க்ஷேத்திரத்தில் கோயில

கொண்டு வீற்றிருந்தருளினார் ஆதலினால் இப் பகுதியானது மற்றைப் பதியினும் சிறந்த சுயம்பு ஸ்தலமாய் விளங்குகிறது எழுவான் திசையில் வல்லிபுர ஆழ்வார் ஆலயமும், படுவான் திசையில் (சுவர்ண) பொன்னாலை வரதராஜப் பெருமான் ஆலயமும் உள்ளன என்று தக்ஷிண கைலாச மான்மியத்திலே சொல்லப்பட்ட பழமையாகிய விஷ்ணு தலங்கள் இரண்டினுள் ஒன்றாகிய இங்கே தேவர், முனிவர், சித்தர், கின்னரர், கவுஸியர், மனுடர் முதலாயினோர் பூசித்து, வேண்டிய வேண்டியாங்கு திருவருள் அடையப் பெற்றனர் என இதிகாசம் கூறும் அதுமட்டோ! மெய்யன்போடும் வழிபடும் அடியாரது எவ்வித துன்பமும் நீங்குதலினாலும், சற்புத்திரப் பேறுண்டாகலினாலும் பல திறத்தடியார் கூட்டம் நிறைந்து பொலியுந் தன்மையை உடையது. இவ்வற்புதங்கள் அனுபவத்தில் கண்கூடாக எல்லாரும் அறியும் பகுதியாயுளது இத்துணைப் பெருஞ் சிறப்பினை உடைய வல்லிபுரஸ்தலப் பெருமை வடமொழிக் ஸ்காந்த புராணத்திலே தக்ஷிண கைலாச மான்மியத்தில ஒரு அத்தியாயமாக அமைந்துள்ளது.

இவ்வல்லிபுர வைபவத்தினைப் பக்தியோடு பாராயணஞ் செய்பவர்கள் இம்மையில் இஷ்ட சித்திகளையும், சந்தானப் பேற்றையும், இலட்சுமி கடாட்சத்தை உடையாராகி இன்பத்தினை அனுபவித்து, மறுமையில் வைகுண்டம் முதலிய புண்ணிய உலகங்களை அடைந்து வாழ்வார்கள்.

ஸ்ரீஸ்காந்த புராணத்தில் உள்ள தக்ஷிண கைலாச மான்மியத்தில் கூறப் பட்டிருக்கும் ஸ்ரீவல்லிபுர வைபவம்.

இலட்சுமி கடாட்க்ஷமுள்ள ஸ்ரீவல்லிபுரமென்னும் ஸ்தலத்தின் மகிமையை ஸ்ரீசூத மகாமுனிவர் சொல்லியிருக்கின்றார்.

முற்காலத்திலே பிரத்தியக்ஷமான கடவுளும் இலக்ஷுமி நாயகரும் ஆகிய ஸ்ரீமகா விஷ்ணுமூர்த்தி ஆனவர் இரணியன் என்னும் பெயருடைய துட்டனாலே வருந்திய தேவர்களது பாதுகாப்புக்காகத் தரிக்கப்பட்ட கங்கணக் கூட்டங் களானவை அசுர தூதர்களாலே கடலின் கண் எறியப்பட்டன. ஆதலால் விரைவில் அவைகளை எடுத்தற் பொருட்டு, பரமசிவனின் கட்டளையினால் உடனே, அன்பரைக் காக்கும் பெருவிருப்பமுடையவரும் வாசுதேவ குமாரரும், உலக நாதருமாகிய ஸ்ரீவிஷ்ணுமூர்த்தி மீன் வடிவைத் தரித்து எறியப்பட்ட கங்கணங்களைக் கடலினின்றும் எடுத்து. இங்கே கடற்கரையில்விட்டுப் பின் அவர் அக்கடலிலே மறைந்தார்.

பின்னர் ஒருநாள் ஸ்ரீ விஷ்ணுமூர்த்தியின் திருவிளையாட்டினால் வல்லிபுரத்திற்கு அணிமையாக வலைத்தொடரிற் பிரவேசித்து மிக்க கோலாகலத் தொனி செய்தார். இதனை வலைஞர் பார்த்துக் கோபமிக்கவர்களானார்கள் அவ்வலைஞர் யாவரும் அக்கடவுளாகிய மீனைப் பிடிக்க விரும்பியவராயினர் இந்நிகழ்ச்சியைப் பார்க்கும்படி மக்கள் வந்தபோது, அம்மீன் குதித்துக் குதித்து உலாவி லவல்லி எனும் பிரசித்தப் பெயரையுடைய ஓர் கன்னிகையின் மடித்தலத்தில் மகிழ்வுடன் விழுந்தது.

பின்பு அவ்வேளையிலே பேரொளியையுடைய மீனுருவைத் தரித்த விஷ்ணு மூர்த்தியானவர் மனுடப் பிள்ளைபோலத் தோன்றினார் அவளும் சந்தோஷத்தோடு கூடியவளாகிப் பிரியத்தோடு அப்பிள்ளையை ஏந்திக் கொண்டு, வெய்யிலினால் மிகவாடியவளாதலால் ஒரு மரத்தினடியிற் சென்று, மகிழ்வோடு தன் சேலையினாலே தொட்டிலைச் செய்து. அத்தொட்டிலின்கண் அக்குழந்தையைச் சயனிக்கச் செய்து அக்கன்னிகை தொட்டிலாட்டற்குரிய பாட்டுக்களைப் பாடி அப்பிள்ளையை நித்திரை செய்வித்தாள் இந்நிகழ்ச்சியைக் காண வந்தவர்கள் எல்லோரும் மிகவும் ஆச்சரிய மடைந்தவர்களாகி அக்குழந்தையைத் தரிசித்தார்கள்.

அறுகின் முளைபோலும் பச்சை நிறமுடையவரும் பீதாம்பரத்தை உடையவரும், துளசி மாலையைத் தரித்தவரும் ஸ்ரீவத்ஸமெனும் திருமறு மேவும் மார்பையுடையவரும் நான்கு புயங்களோடு கூடியவரும் இடக்கரத்தில் சுதர்சனம் என்னும் சக்கரத்தையும், வலது கரத்தில் சங்கையும் தரித்து ஆதிசேஷ பரியங்கத்தில் சயனிப்பவரும் வரத அபயங்களைப் பொருந்தியவரும் ஊர்த்துவ புண்டரத்தினால் அலங்காரமுடையவரும் எனச் சொல்லப்படும் இலட்சுமி வாச திவ்ய சுயரூபத்தை அக்கன்னிகையானவள் தரிசித்து மோகமாகிய ஆகுலமுற்றவளாயினள்.

இந்த அற்புத நிகழ்ச்சியை முறை முறையே ஒவ்வொருவர் வழியாகக் கேள்வியுற்று உவப்போடுகூடி அவ்வூரில் வாழ்கின்றவர்கள் எல்லோரும் அவ்விடத்திலே வந்தனர் அவர்களனைவரும் மகிமையுடைய தேவரும், வாசுதேவரும், உலகநாதரும் ஆகிய கடவுளைத் தரிசித்தனர், உவகையாகிய கடலில் அழுந்தனர், ஒருவர்க்கொருவர் சொல்லுகின்றனராயினர்.

நாங்கள் தனவந்தரானோம், தனவந்தரானோம் எங்கட்கு இரட்சிப்பு உண்டாகும் பொருட்டாகவே சங்கு சக்கரங்களைத் தரித்தவரும், தேவரும், பகவானும உயிர்களைக் காப்பவரும் ஆகிய ஸ்ரீவிஷ்ணு மூர்த்தி பிரசன்னமாயினரென்று அன்பு கூர்ந்து உவப்போடு துதிக்கத் தொடங்கினார்கள்.

மச்சரூபியாகிய தேவரீருக்கு வணக்கம்!
ஆமையுருவான ,, ,,
பன்றியுருவான ,, ,,
தேவர்களுக்கு சுகத்தை உதவுனம் ,, ,,
பிரமசாரிய வாமன ரூபத்தை உடைய ,, ,,
சூரிய வம்சத்தரசர்களை அழித்த பரசுராம அவதார தேவரீருக்கு வணக்கம்!
கலப்பைப் படையை ஏந்திய பலராம ரூபமான தேவரீருக்கு வணக்கம்!
ஸ்ரீ கிருஷ்ணவதாரமான தேவரீருக்கு வணக்கம்!
நரசிங்கரூபமான ,, ,,
கற்கிரூபமான ,, ,,

இவ்வண்ணம் 10 ரூபத்தையுடையவரும், வல்லீபுரத்தில் எழுந்தருளுகின்றவரும் ஆகிய தேவரீருக்கு வணக்கம்! எக்கடவுள் எல்லாவுயிருள்ளும் சரக்கு ரூபத்துடன் கலந்திருக்கின்றாரோ அப்படிப்பட்ட தேவரீருக்கு வணக்கம்! எக்கடவுள் எல்லா உயிருள்ளும் புத்திரூபத்துடன் கலந்திருக்கிறாரோ அப்படிப்பட்ட தேவரீருக்கு வணக்கம்! அன்பர்களைக் காக்கும் அருட்கடலாய் உற்றவரே வணக்கம்! தேவரீருக்கு வணக்கம்!

தண்டத்தையும், சங்கையும் தரித்தவரே தேவரீருக்கு வணக்கம்!

எப்போதும் இஷ்டமான விரும்பியவைகளைக் கொடுத்தருளுகின்றவரே வணக்கம்!

பெரிய சக்கரத்தை தரித்தவரே தேவரீருக்கு வணக்கம்! வணக்கம் இறைவா, எம்மாற் செய்யப்பட்ட எல்லாப் பிழைகளையும் பொறுத்தருளுக!

பாற்கடலிற் துயில்கின்றவரும், அகன்ற தாமரைக் கண்ணையுடையவரும் பெயர் மாத்திரம் எஞ்சி இருக்கும்படி மகாபலிச் சக்கரவர்த்தியின் வைபவங்களை அடக்கியவரும், பற்பல சராசரங்களைப் படைக்கும் பிரமதேவர் உதித்த உந்திக் கமலத்தை உடையவரும் பரமபுருஷராகிய தேவரீருக்கு வணக்கம்!

இம் மக்கள் யாபேரும் மகான்மாவும், பகவானும் சனங்களால் இஷ்டசித்திகள் பெற வேண்டப்படுகின்றவரும் ஆகிய ஸ்ரீ விஷ்ணுமூர்த்தியை இவ்வாறே துதித்துப் பெருமகிழ்ச்சி கூடுமுள்ளத்தையுடையவர்களாயிருந்தார்கள்.

இவ் வண்ணமிவர்கள் இருக்கும் போதே பகவானும், இலக்குமிநாயகரும் ஆகிய ஸ்ரீ விஷ்ணுமூர்த்தியானவர் எல்லா உலகத்தாருங் காண மறைந்தவராகி

முன்போல மற்சருபமுடையவராகிக் கடலினுள் மறைந்தார் அங்கு நின்ற எல்லாரும் மயக்கமாகிய வியாகுலமடைந்தவர்களாய் அருமையான தவத்தைச் செய்தார்கள்.

இந் நிகழ்ச்சியை உத்தம தேவராகிய ஸ்ரீ விஷ்ணுமூர்த்தி திருவுளங் கொண்டு ஓர் பிராமண வடிவத்தோடு அங்கே எழுந்தருளி அத் தவத்தவர்களை நோக்கி அருள் செய்தார் "தவச்செயலான் மகிமை பெற்ற அன்பர்களே! அஞ்ச வேண்டாம் எல்லாப் படைக்கலங்களினுள்ளுஞ் சிறந்தோங்கும் சுதர்சனம் என்னும் சிறப்புத் திருநாமத்தையுடைய இச் சக்கராயுதத்தை மிக்க பிரீதியுடன் நல்ல சுப முகூர்த்தத்தில நல்ல இலக்கினத்தில் விதிப்படி பிரதிட்டை செய்து பேரன்போடு நித்திய நைமிக்கக காமிய பூசைகளை நடத்தி வழிபடக் கடவீர்கள். இதனைப் பூசித்தால விரும்பிய எல்லாவற்றையும் நீங்களடைவீர்கள்" என்று கூறி அந்தப் பிராமணோத்தமர் மறைந்தார்

அவர்கள் யாவரும் பேராசையுடையவர்களாய் அடிக்கடி ஸ்ரீவிஷ்ணு மூர்த்தியைத் துதித்து துதித்துச் சக்கராயுதத்தை வாங்கிக் கொண்டு விரைவிலே மகிழ்வுடன் நகரையடைந்து ஒரு ஆலயத்தை அமைத்து விதிப்படி அச்சக்கராயுதத்தை பிரதிட்டை செய்து முறை தவருது பூசை நடத்தி புத்திர களத்திரர்களோடும், திரவிய சம்பந்துக்களோடும் மிக்க பக்தியுடையவர்களாய் எல்லாரும அந் நகரிலே வாழ்திருந்தனர்.

மக்கள் எல்லாரும் சகல சாத்திரங்களின் பொருள் உண்மை உணர்ந்த ஸ்ரீசூதமகாமுனிவரிடம் சென்று 'பகவானுகிய ஸ்ரீமகா விஷ்ணுமூர்த்தியானவர் யாது காரணத்தால் மச்சருபமாகி கன்னிகையின் மடித்தலத்திற் சென்று தங்கினார்' அவருடைய மடித்தலத்திலே திருமகள் நாயகராகிய ஸ்ரீ விஷ்ணுமூர்த்தி குழந்தை உருவமாகியும் தங்கினுர் அல்லவா அக்காரணம் முழுவதையும், அவண வைபவத்தையும் விரிவாகச் சொலலியருளும்படி'' வேண்டினுர்கள். அதற்கு ஸ்ரீ சூதமகாமுனிவர் அவர்களை நோக்கிச் சொல்வாராயினர்.

முன்னொரு காலத்திலே லவல்வி எனும் பெயருடைய சிறந்த கன்னி யொருத்தி வைசிய குலத்தில் பிறந்து, பேரழகெனும் யௌவனப் பருவத்தை யுடையவள் நெடுங்காலமாகப் புத்திரப் பேறில்லாது மலடியாகி இருத்தலால, மிகவும் கவலையடைந்தவளாய், இதன் காரணத்தை அறியாதவளாய் தபோநிதியாகிய

பிருகு முனிவரைச் சென்றடைந்தாள். அக்கன்னிகை முனிவரை நோக்கி "பகவானே! சுவாமி! எக்காரணத்தால் யான் புத்திரப் பேறற்றேன்? என்ன பாவம் செய்தேன்? அதன் காரணத்தை அறியத் தருதி" எனப் பிரார்த்தித்து வேண்டினாள்

பிருகு முனிவர் அவளை நோக்கி பெண்ணே! "நீ முற்பிறப்பில் மயக்கத்தினால் ஒரு பாம்பைக் கொன்றாய். அந்தப் பாம்பின் சாபத்தினால் உனக்கு இம்மையிலே மலட்டுத் தன்மை வந்தது. அந் நாக சாபத்தால் நீ எப்பிறப்பிலும் மலடாகவே இருப்பாய் அந் நாக சாப தோஷம் நீங்கும் பொருட்டு இதனைத் தீர்க்கவல்ல பரமசிவனைச் சிந்தித்துத் தவஞ்செய்யக் கடவாய் உன் தவ வலிமையினால் அவர் உனக்குத் தோன்றி அருள் புரிவார். அவர் தரிசனம் கிடைத்தபோதே அவர் உன் சாபத்தை நீக்கியருள்புரிவார்" என உபதேசித்து மௌனியானார்.

அக்கன்னிகை பெருவகையடைந்து நல்ல மங்களகரமான தவச்சாலையை அமைத்து தவஞ் செய்தாள். அவளின் தவத்தின் வலிமையினாலே சிவபெருமான் தோன்றி, பெண்ணே! உனக்கு விருப்பமான வரம் யாது? அதனைக் கூறி என்னிடத்தில் பெற்றுக்கொள்" என்றலும், இதனைக் கேட்ட அக்கன்னிகை ஆனந்தமடைந்து தோத்திரம் நமஸ்காரம், பிரதஷிணம் எனுமிவைகளை அன்புடன் செய்து "அன்பர்களைக் காக்கும் பரம்பொருளே! சுவாமி! கொடிதாகிய நாக சாபத்தினாலே யான் புத்திரப் பேறற்றவளானேன். அச்சாபம் நீங்கும்படி அருள் புரிய வேண்டுகிறேன் எனப் புத்திர சோகத்தால் சிவபிரானைப் பிரார்த்தித்தாள்

கருணா சமுத்திரமாகிய சிவபெருமான் அவள் துயர்கேட்டு அக்கன்னிகையைப் பார்த்துச் "சிறுமியே! வருந்த வேண்டாம் வல்லீபுரம் என்னும் பெயருள்ள தேசத்திலே லவல்லி என்னும் கீர்த்தி பெற்ற பெயர் உடையவளாய் பிறந்திருக்கக் கடவாய்! அப்போது பகவானாகிய ஸ்ரீ விஷ்ணுமூர்த்தியானவர் தேவ காரியத்தை முடிப்பது காரணமாக வாசுதேவரும், தேவ உத்தமருமாகிய ஸ்ரீ விஷ்ணுமூர்த்தி மற்ச வடிவத்தை தாங்குவர் அவர் மற்ச வடிவத்தோடு உன் மடித்தலத்தில பாய்ந்திருப்பர் ஸ்ரீ விஷ்ணுமூர்த்தி பின்னர் உன் மடியிலே குழந்தை வடிவமுடையவராவர், அவரின் வடிவத்தைத் தீண்டியபோதே உன் நாக சாபந்தீரும் பின் நீ வேறிடத்து, இம்மையில் பல புத்திரர்களோடும், தனதானிய முதலிய சம்பந்துக்களோடும் வாழ்ந்திருப்பாய்" என்று தேவாதிதேவனாகிய சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளி மறைந்தார்.


இக் காரணத்தினாலே ஸ்ரீ விஷ்ணுமூர்த்தி மற்ச வடிவத்தைத் தாங்கினார் அம் மற்சம் லவல்லி என்னும் பெயருடைய கன்னிகையின் மடியில் தங்கினார். அவளும் பின்னர் புத்திர பௌத்திராதி பாய்க்கியங்களுடன் பொருந்தியவளாய் இவ்வுலகிலே இம்மைச் சுகமனைத்தும் அனுபவித்து தேகமுடிவிலே முத்தியை அடைந்தாள்.

இவ் வல்லிபுரம் ஆகிய மகா ஸ்தலம் ஸ்ரீ விஷ்ணுமூர்த்திக்கு உவப்பைக் கொடுக்கிற சிறந்த ஸ்தலமாகும் அன்றியும் வைகுண்டபதத்தில் அனுபவிக்கும் முத்தியின்பத்தை கொடுப்பதுமாம் வல்லிபுரம் என்னும் மகா திவ்ய சேஷத்திரத்தை எந்த மனிதன் இப்பிறவியில் தரிசிக்கிறானோ, அல்லது ஸதலத்தின் கண் வாசம் பண்ணுகிறானோ, அல்லது ஸதலத்தின் சிறப்பினை வாயாற கூறுகிறானோ, பஞ்ச பருவ காலங்களிலும், ஜயந்தியிலும் மற்றும் விசேஷ காலங்களிலும், பரிசுத்த மனமுடையவனாகி, அன்புடன் அங்கே வீற்றிருக்கும் கடவுளை தரிசிக்கின்றானோ அவனுக்கு எப்போதும் மரண பயமில்லை சரீராரோக்கியம் உண்டாகும். இது உண்மை. அவன் இவ்வுலகில் சுகம் அனுபவித்து தேகாந்தத்திலே ஸ்ரீவிஷ்ணுபதத்தை அடைவான்!


☞ வல்லிபுரம் என்று சொல்லப்படும் மகா ஸ்தலம் துன்னாலை, புலோலி, வராத்துப்பளை, கற்கோவளம் என்ற கிராமங்கட்கு இடையில் இருந்த சிங்கைநகர் என்ற இராசதானியென்று அனுமானிக்கக் கூடியதாயிருக்கிறது

மங்களம்! சுப மங்களம்!

ஸ்ரீவல்லிபுரேசனுக்குச் சுப மங்களம்!







## வாழ்த்து

ஏழ் பெருங்கடல் மானிலம் எங்கணும் நல்லறமே
சூழ்க வண் தமிழ் ஓங்குக தேங்குக சுருதி
வாழ்க பைமபுயல் விளங்கும் வளம்கெழு மனு நூல்
வாழ்க அன்புடை அடியவர் மன்னு மாதவமே

- வில்லிபுத்தூரர் -

## மங்களம்

வாக்காலும் மனத்தாலும் அறியப்படாதவரும்
வேதமுடிவின் பொருளாளவரும்
உலகத்திற் கோர் முதல்வரும்
ஞானவடிவினரும்
ஆகிய கோவிந்தரை அடியேன் வணங்குகிறேன்.

*( ஆதிசங்கரர் தந்த விவேக சூடாமணிக் காப்பு )*

குமார் அச்சகம் — பருத்தித்துறை.